பரமக்குடி நகராட்சி அலுவலகம்
நாள். 28.11.2025

அன்புடையீர்,

பரமக்குடி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நிகழும் விசுவாவசு வருடம் டிசம்பர் மாதம் ( 01.12.2025 ) மாலை 03.00 மணிக்கு கீழ்க்காணும் பொருள் குறித்த அவசரக் கூட்டம் நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்
பரமக்குடி நகராட்சி.

<table>
<tr><td>பொருள்-1</td><td>அரசாணை எண்.119 & 120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.26.06.2025,ன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதிநித்துவம் அளிக்கும் வகையில் பரமக்குடி நகராட்சி அலுவலகத்தில் 26.11.2025 அன்று காலை 11.00 மணிக்கு திரு.சு.தர்மராஜா என்பவர் மாற்றுத்திறனாளி உறுப்பினர் பதவியேற்பு உறுதிமொழி ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர், நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு பதவிப்பிரமாணம் செய்து சிறப்பித்தது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1827/2025/சி1 நாள் 26.11.2025)<br>தீர்மானம் எண். 1293 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்-2</td><td>கல்விக்கடன் மேளா 2025-2026 மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்டம், பரமக்குடி அரசு கலைக்கல்லூரியில் முன்னோடி வங்கிகளில் கல்வி கடன் தொடர்பாக மாபெரும் கல்விக்கடன் வழங்கும் முகாமிற்கு மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் ப்ளக்ஸ் போர்டுகள், ஆட்டோ உள்ளிட்ட வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்யும் பணிக்கு கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><table><tr><td>1.</td><td>ஸ்ரீகல்கி ப்ளக்ஸ் மற்றும் பிரிண்டர்ஸ்</td><td>ரூ.14000/-</td></tr><tr><td>2.</td><td>குருவி ப்ளக்ஸ் மற்றும் பிரிண்டர்ஸ்</td><td>ரூ.14850/-</td></tr><tr><td>3.</td><td>தமிழா பிரிண்டர்ஸ்</td><td>ரூ.15700/-</td></tr></table>மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீகல்கி ப்ளக்ஸ் மற்றும் பிரிண்டர்ஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம், மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கு<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண். 1294 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்-3</td><td>பரமக்குடி நகராட்சியில் 36 வார்டுகளில் சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகராட்சியாகும். இங்கு மழை காலங்களில் வி.பி.நகர், பாலன்நகர், பொன்னையாபுரம், வைகை நகர், புதுநகர் போன்ற பகுதிகள் மழைக்காலங்களில் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளாகும். தற்பொழுது மூன்று</td></tr>
</table>

| | |
|---|---|
| | இயந்திரங்கள் மூலம் மழைக்காலங்களில் அகற்றப்பட்டு வருகின்றது. இயந்திரங்கள் பழுதடைந்து அடிக்கடி இயக்கமுடியாமல் உள்ளது. எனவே தற்பொழுது பொது சுகாதார அவசரம் அவசியம் கருதி மூன்று கூடுதலாக மூன்று இயந்திரங்களும் மேலும், மலழக்காலங்களிலும் காற்று அதிகமாக வீசும் காலங்களிலும் தெருக்களின் மற்றும் சாலைகளின் உள்ள மரங்கள் முறிந்து விழுங்கின்றன. எனவே அவற்றை அகற்ற 2 மரம் வெட்டும் இயந்திரமும் கொள் முதல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.1295 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-4 | பரமக்குடி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் டிராக்டர் வாகனம், ஜேசிபி வாகனம், பாப்காட் ரோபாட் வாகனம் மற்றும் கழிவுநீர் அகற்றும் லாரி வாகனம் ஆகிய அனைத்து பொதுசுகாதார வாகனங்களுக்கு 2025-2026ம் ஆண்டிற்கான சாலைவரி, பசுமைவரி மற்றும் வாகன காப்பீட்டுத் தொகைக்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.500000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.சாலைவரி மற்றும் வாகன காப்பீடு போன்ற சேவைகளுக்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>3. பொதுசுகாதார வாகனங்களுக்க அவசர அவசியம் கருதி சாலை வரி பசுமை வரி செலுத்தியதற்குண்டான தொகை மன்றத்தின் அனுமதிக்கு<br>**தீர்மானம் எண்.1296 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-5 | பரமக்குடி நகராட்சியில் தமிழக முதல்வரின் திட்டமான 2025-2026ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற 1 முதல் 36 வார்டு பகுதிகளில் வார்டு சபா மற்றும் பகுதி சபா கூட்டம் நடத்தப்பட்ட முகாம்களில் நடைபெற்ற இடங்களில் விளம்பரபதாகை மற்றும் ப்ளக்ஸ் போர்டுகள் வைத்தமைக்கு உத்தேச செலவுத்தொகை ரூ.100000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>**1. மன்றம் அனுமதிக்கலாம்**<br>2. மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br>**தீர்மானம் எண்.1297 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-6 | இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் Bobcot வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள பேட்டரி பழுதடைந்து உள்ளதால் அதனை மாற்றி புதிய |

பேட்டரி கொள் முதல் செய்வதற்கு கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | வாகன எண் | ஸ்ரீஅபிராமி ஆட்டோ ஏஜென்ஸிஸ் | சுந்தரம் & CO |
|---|---|---|---|
| 1 | TN 65AZ 2553 | ரூ.12500/– | ரூ.13200/– |

வரப்பெற்ற 2 விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பேட்டரி கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி வழங்கிய **ஸ்ரீஅபிராமி ஆட்டோ ஏஜென்ஸிஸ்** பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அங்கீகரிக்கலாம்

2.குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **ஸ்ரீஅபிராமி ஆட்டோ ஏஜென்ஸிஸ்,** Paramakudi என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.1298 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்-7**

நகர்மன்றதீர்மான எண்.1121 நாள் 30.10.2025 ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் 50 DBC பணியாளர்களை கொண்டு டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள 08.08.2025 முதல் 31.10.2025 வரை 3 மாத கால பணி உத்தரவு வழங்கிய நிலையில் 31.10.2025ம் தேதியுடன் முடிவடைவதால் மேற்கண்ட பணியானது பொது சுகாதாரப்பணி என்பதால் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பொதுமக்களின் நலன் கருதி தொடர்ந்து டெங்கு தடுப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் சுகாதார ஆய்வாளர்கள் அவர்களின் அறிக்கையின் படி மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவித்த பழைய தினக்கூலி ஊதிய விகிதத்துடன் கூடுதலா EPF ESI மற்றும் இதர செலவினங்களுடன் 01.11.2025 முதல் 31.01.2026 வரை மூன்று மாதகாலத்திற்கு ஏற்கனவே பணி மேற்கொண்டு வந்த நிறுவனமான Exsernet Madurai என்ற நிறுவனத்தின் மூலம் அரசு வழிகாட்டுதலின் படி பணி மேற்கொள்வதற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் முன்அனுமதிவேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவு தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.1299 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**பொருள்-8**

பரமக்குடி நகராட்சியில் சுமார் 30000 மேல் குடியிருப்புகளின் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகராட்சியாகும். இந்நகராட்சியில் 188 சுகாதாரப் பணியாளர்களை கொண்டு நாள்தோறும் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களிலும் குப்பைகளை சேகரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேலும் 50 DBC பணியாளர்களைக் கொண்டு டெங்கு மற்றும் சிக்கன்குனியா நோய்களை பரப்பும் கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முதிர் கொசு ஒழிப்பு நடவடிக்கையாக கொசுபுகை மருந்து அடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது இயந்திரம் மூலம் கொசுப் புகை மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. தற்போது வாகனத்தில் வைத்து அடிக்கப்பட்டு வந்த இயந்திரம் பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால் எனவே தற்பொழுது மழைக்காலம் என்பதால் டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஒரு எண்ணம் Vehicle Mounted fogging machine வாங்கி வழங்க அதற்காகும் தோராய செலவினம் ரூபாய் ஏழு லட்சத்திற்கும் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண். 1300 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-9 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நான்கு அரசு மற்றும் ஒன்பது நகராட்சி பள்ளிகளில் M.S.Man Power Agency Paramakudi என்ற நிறுவனம் 17 தூய்மைப்பணியாளர்களை கொண்டு 01.11.2023 முதல் 30.04.2024 வரை பணி நீடிப்பு செய்து துப்புரவுபணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீடிப்பு உத்தரவு காலம் 30.04.2024ம் தேதியுடன் முடிவடைவதாகவும், மேலும் 01.06.2024 முதல் 03.04.2025 வரை 11 மாதங்களுக்கு பணி நீடிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் 30.04.2025ம் தேதியுடன் முடிவடைவதால் மேலும் 02.06.2025 முதல் 31.10.2025 வரை 5 மாதங்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனவே, ஒப்பந்த நிறுவனம் 01.11.2022 முதல் பணியினை மேற்கொண்டு வருவதால் மூன்றாண்டு கால அளவானது 31.10.2025ல் முடிவடைகிறது. தற்பொழுது ஒப்பந்தபுள்ளி கோரும் பணிகள் நடைபெற்று வருவதால் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தற்போது பள்ளிகளில் தூய்மைபணிகள் மேற்கொண்டு வரும் M.S.Man Power Agency Paramakudi என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கி வரும் அதே ஊதிய விகிதத்தில் 01.11.2025 முதல் 30.11.2025 வரை மேலும் ஒரு மாத காலத்திற்கு பள்ளிகளில் தூய்மைபணிகள் மேற்கொள்ள பணிநீடிப்பு செய்து உத்தரவு வழங்க நகர் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படு.கிறது<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. M.S.Man Power Agency Paramakudi என்ற நிறுவனத்திற்கு தற்போது வழங்கி வரும் அதே ஊதியவிகிதத்தில் 01.11.2025 முதல் 30.11.2025 வரை பள்ளி வேலைநாட்களாக உள்ளதால், மேலும் ஒரு மாதகாலத்திற்கு பள்ளிகளில் தூய்மைபணிகள் மேற்கொள்ள பணிநீட்டிப்பு செய்து நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை கல்விநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண். 1301 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-10 | பரமக்குடி நகராட்சி வருவாய்நிதி (Revenue ) குடிநீர் நிதி (Water supply) கல்விநிதி (Education fund) ஆகியவற்றிற்கான 2025-2026 ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும் மற்றும் 2026-2027 ஆண்டிற்கு உத்தேச வரவு செலவு மதிப்பீடும் தயார் செய்துள்ளது மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண். 1302 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| பொருள்-11 | இந்நகராட்சியின் 1 முதல் 36 வார்டுகளில் உள்ள 22 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் இருந்து பொதுமக்களுக்கு குடிநீர் சப்ளை செய்வதற்கு வால்வு திறக்கப்பட்டு பணிகளை மேற்கொள்ள 8 எண்ணம் பணியாளர்கள் சப்ளை செய்யும் ரூ.9.50 இலட்சத்திலான பணிக்கு 27.11.2025 -அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><table><tr><td>1.</td><td>M/S.மேன்பவர் ஏஜென்ஸி<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>0.08% மதிப்பீட்டை விட குறைவு</td></tr><tr><td>2.</td><td>M/S.எக்ஸர்நெட்<br>ஒப்பந்ததாரர், மதுரை</td><td>1.43% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr></table> |

<table>
<tr>
<td></td>
<td>
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/S.மேன்பவர் ஏஜென்ஸி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம், மன்றம் அனுமதிக்கு<br>
(டிசம்பர் 2025 முதல் மே 2026 வரை ஆறு மாத காலம்)<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி பணியை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>
தீர்மானம் எண். 1303 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது
</td>
</tr>
<tr>
<td>பொருள்-12</td>
<td>
இந்நகராட்சிக்குட்பட்ட காட்டுபரமக்குடி மற்றும் கள்ளிக்கோட்டை தலைமை நீரேற்று நிலையங்களிலும் மற்றும் வைகை ஆற்றுப்படுகைகளில் இருந்து மோட்டார் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியில் நீரேற்றும் பணி மேற்கொள்ள 7 எண்ணம் பணியாளர்கள் சப்ளை செய்யும் ரூ.8.50 இலட்சத்திலான பணிக்கு 27.11.2025 -அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><td>1.</td><td>M/S.மேன்பவர் ஏஜென்ஸி<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>0.08% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/S.எக்ஸர்நெட்<br>ஒப்பந்ததாரர், மதுரை</td><td>1.43% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/S.மேன்பவர் ஏஜென்ஸி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம், மன்றம் அனுமதிக்கு<br>
(டிசம்பர் 2025 முதல் மே 2026 வரை ஆறு மாத காலம்)<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி பணியை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>
தீர்மானம் எண். 1304 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது
</td>
</tr>
<tr>
<td>பொருள்-13</td>
<td>
பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தார்ரோடுகளில் மராமத்து பணி மேற்கொள்ளும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18464/2023/DO1 நாள்.07.10.2025-ல் நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து 26.11.2025-அன்று ரூ.9.90 இலட்சத்திற்கு முதன் முதலாக மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><td>1.</td><td>திரு.G.செல்வம்<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>0.20% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/S.S.S & Co<br>ஒப்பந்ததாரர், தேவகோட்டை</td><td>5.10% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.20% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.G.செல்வம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு பணியின் அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டு பணிக்கு வேலை உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
1. மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டு நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிக்கு வேலை உத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
தீர்மானம் எண். 1305 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது
</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள்-14</td>
<td>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தூய்மைப் பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டத்தில் உணவு சேவை வழங்கும் பணி நிறுவனங்களை தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி 21.11.2025 அன்று முதன் முதலாக மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><td>1.</td><td>M/S.விஷாஹும் அன் கோ<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>ரூ.43.05/-(ஒரு உணவிற்கு)</td></tr>
<tr><td>2.</td><td>M/S.நாதன் அன் கோ<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>ரூ.45.00/-(ஒரு உணவிற்கு)</td></tr>
</table>
மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை கொடுத்துள்ள M/S. விஷாஹும் அன் கோ ஒப்பந்ததாரர், மேலும் விலையை குறைத்துத் தர 25.11.2025 அன்று இந்நகராட்சியிலிருந்து கடிதம் அனுப்பப்பட்டதில், அதனைத்தொடர்ந்து, 26.11.2025 ஒப்பந்ததாரரின் கடிதத்தின் படி ஒரு உணவிற்கு ரூ.41.42/-க்கு ஒப்பந்தப்புள்ளி விலைக்கு செய்து தர சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம், மன்றம் அனுமதிக்கு<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை கொடுத்துள்ள M/S.விஷாஹும் அன் கோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்<br>
தீர்மானம் எண். 1306 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள்-15</td>
<td>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின் மூலம் 9 நகராட்சி பள்ளிகள் மற்றும் 15 அரசு உதவி பெறும் பள்ளிகளில் உள்ள 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கும் பணிக்கு 27.10.2025 அன்று முதன் முதலாக மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. 12.11.2025 அன்று தொழில்நுட்ப தகுதி உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கான விலைப்புள்ளி அடங்கிய உறை திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><td>1.</td><td>M/S.விஷாஹும் அன் கோ<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>ரூ.12.60/-(ஒரு உணவிற்கு)</td></tr>
<tr><td>2.</td><td>M/S.நாதன் அன் கோ<br>ஒப்பந்ததாரர், பரமக்குடி</td><td>ரூ.12.65/-(ஒரு உணவிற்கு)</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை கொடுத்துள்ள M/S.விஷாஹும் அன் கோ ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு உணவு வழங்க வேண்டியுள்ளதால், நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணியின் அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டு வேலைஉத்தரவு (26.11.2025 முதல் 25.10.2028 வரை மூன்று ஆண்டுகள்) வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<u>அலுவலகக் குறிப்பு</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு உணவு வழங்க வேண்டியுள்ளதால், நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
தீர்மானம் எண். 1307 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள்-16</td>
<td>இந்நகராட்சியின் நகர்மன்றத்தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்காக புதிதாக வாங்கப்பட்ட வாகனத்திற்கு ஓட்டுநர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க உத்தரவு வழங்கிய நிலையில் ஓட்டுநர் சப்ளை செய்யும் பணிக்கு ரூ.3.50 இலட்சத்திலான</td>
</tr>
</table>

பணிக்கு 12.11.2025 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | M/S.MAN POWER AGENCY,PARAMAKUDI | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| 2. | EXCERNET, MADURAI | மதிப்பீட்டை விட 1.05% அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/S.MAN POWER AGENCY, PARAMAKUDI ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்படிபணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு வேலை உத்தரவு(நவம்பர் 2025 முதல் அக்டோபர் 2026 வரை ஒரு வருட காலத்திற்கு) வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 1308 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்-17

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023-24-ன் கீழ் ரூ.13.50 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டுவதற்கு நகர் ஊரமைப்பு துறையினரிடம் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டும் பணி நடைபெற்றுள்ளது என வழக்கு எண்.WP(MD) No.27706/2025-ன் கீழ் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு திரு.M.மணிகண்டன் என்பவர் தொடர்ந்துள்ளார். அதன் பேரில் அதனை எதிர் கொண்டு ஆஜராகியுள்ள இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.சரவணன் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளை அவர்கள் (Professional fees and other Miscellaneous Expenses)ஆக ரூ.13400/- வழங்க தொகை பட்டியல் வரப்பெற்றுள்ளது நாள்.30.10.2025 ஆகும். எனவே மேற்படி தொகையை வழக்கறிஞருக்கு வழங்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மானம் எண். 1309 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்-18

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிப்பறை மற்றும் பள்ளி வளாகம் ஆகியவற்றை சுத்தம் செய்ய 13 பள்ளிகளில் 17 தூய்மைப்பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ள ரூ.30.00 இலட்சத்திலான பணிக்கு 21.11.2025 அன்று மின்னணு வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | M/S.மேன்பவர் ஏஜென்ஸி ஒப்பந்ததாரர், பரமக்குடி | 0.43% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/S.எக்ஸர்நெட் ஒப்பந்ததாரர், மதுரை | மதிப்பீட்டு விலை |

<table>
<tr><td></td><td>மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.43% குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/S.மேன்பவர் ஏஜென்ஸி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம், மன்றம் அனுமதிக்கு<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>தீர்மானம் எண். 1310 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்-19</td><td>வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) 2025-2026 மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வண்ணம் ப்ளக்ஸ் போர்டு மூலம் விளம்பரம் செய்யும் பணிக்கு கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளன.<br><table><tr><td>1.</td><td>ஸ்ரீ கல்கிப்ளக்ஸ் மற்றும் பிரிண்டர்ஸ்</td><td>ரூ.5700/-</td></tr><tr><td>2.</td><td>குருவி ப்ளக்ஸ் மற்றும் பிரிண்டர்ஸ்</td><td>ரூ.6540/-</td></tr><tr><td>3.</td><td>தமிழா பிரிண்டர்ஸ்</td><td>ரூ.6890/-</td></tr></table>மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கல்கிப்ளக்ஸ் மற்றும் பிரிண்டர்ஸ் என்ற நிறுவனத்தின் ரூ.5700/- விலைப்புள்ளியை ஏற்கலாம், மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கு<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண். 1311 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்-20</td><td>வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) 2025-2026 மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வகையில் ஒலிபெருக்கி மூலம் ஆட்டோ விளம்பரம் செய்யும் பணிக்கு ரூ.14600/-வழங்க மன்றத்தின் அனுமதிக்கு<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண். 1312 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்-21</td><td>பரமக்குடி நகராட்சி வார்டு-G, பிளாக்-24 நகரளவு எண்.45/2ஏ1ஏல் வாதி கிரையம் பெற்ற நிலஉரிமை கோரி திரு.சிவராமலிங்கம் மற்றும் கமலம் ஆகியோர் பரமக்குடி சார்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.O.S.24/2021 தீர்ப்பு நாள் 02.09.2025ல் நகராட்சி சார்பாக தீர்ப்பு பெறப்பட்டது. அதனை எதிர்த்து இவ்வழக்கின் வாதி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு வழக்கு எண். A.S.52/2025 வழக்கு விசாரணை 03.12.2025 அன்று நடைபெற உள்ளதால் இவ்வழக்கில் ஆஜராக நகர்மன்ற வழக்கறிஞர் திரு.ஜான்ராஜதுரை அவர்களை அனுமதிக்கலாம். மேலும் இவ்வழக்கு உரிய செலவு தொகையினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1221/2024/எப்1)<br>தீர்மானம் எண். 1313 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள்-22</td><td>பரமக்குடி நகராட்சி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நகராட்சி பிரதிவாதியாக நடைபெற்ற கீழ்க்கண்ட வழக்குகளில் முன்னாள் நகர்மன்ற வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு நடத்தியதற்கு உரிய வழக்கு கட்டணம் வழங்காமல் நிலுவையில் உள்ளதை 14.11.2025ம் தேதிய வழக்கறிஞர் கடிதத்தில்</td></tr>
</table>

கோரியுள்ள நிலுவையில் உள்ள தொகை கீழ்க்கண்டவாறு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வழக்கு எண்.மற்றும் தீர்ப்பு நாள் | வழக்கறிஞர் பெயர் | வழக்கு நடைபெற்ற பிரிவு | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | W.P.(MD)No.19516/2020 dated:28.07.2022 | திரு.எம்.கண்ணன் | பொறியியல் பிரிவு | 15000.00 |
| 2 | W.P.(MD)No.658/2022 dated:08.03.2023 | திரு.எம்.கண்ணன் | பொறியியல் பிரிவு | 15000.00 |
| 3 | W.P.(MD)No.26160/2019 dated:28.01.2020 | திரு.எம்.கண்ணன் | பொதுசுகாதாரப் பிரிவு | 15000.00 |
| 4 | W.P.(MD)No.12609/2022 dated:12.09.2023 | திரு.எம்.கண்ணன் | நகரமைப்பு பிரிவு | 15000.00 |
| 5 | W.P.(MD)No.24296/2024 dated:16.10.2024 (GST வழக்கு) | திரு.எஸ்.வரதராஜன் (கண்ணன் வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்தது. | கணக்குப் பிரிவு | 25000.00 |
| | | | மொத்தம் | ரூ.85000.00 |

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நீதிமன்ற வழக்கின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 860 /2025/F1

**தீர்மானம் எண். 1314 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

பொருள்-23

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட ஜீவ நகர், எமனேஸ்வரம் பகுதியில் ரூ176.00 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட நவீன எரிவாயு (LPG) தகன மேடையை செயல்படுத்துவதற்கும்,பராமரிப்பதற்கும் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த தொண்டு நிறுவனங்களை விண்ணப்பிக்க கேட்டு 03.11.2025 ம் தேதி செய்திதாள் விளம்பரம் செய்யப்பட்டது.விளம்பரம் செய்யப்பட்டதின் பேரில்,முத்தையா நினைவு அறக்கட்டளை,மதுரை என்ற நிறுவனம் மேற்கானும் நவீன எரிவாயு (LPG) தகன மேடையை செயல்படுத்தவும்,பராமரிக்கவும் விண்ணப்பம் செய்துள்ளார்கள்.எனவே ஜீவா நகர் ,எமனேஸ்வரம் பகுதியில் அமைந்துள்ள நவீன எரிவாயு (LPG) தகன மேடையில் ஒரு இறந்த உடலை எரியூட்டுவதற்கு எரிவாயு உருளை மற்றும் இதர செலவுகளை கணக்கில் கொண்டு கட்டணமாக ரூ.3000/- வசூலிக்கவும், வசூலிக்கப்பட்ட கட்டணத்திலிருந்து நகராட்சிக்கு ரூ.300/- செலுத்த நிர்ணயம் செய்யப்பட்டு பணி உத்தரவு வழங்க நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u> :-

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 1315 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்
பரமக்குடி நகராட்சி.